# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2470 - 2026 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2026.01.02

2470 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 12 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 02 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | 05 | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 – B82752 - 5403 (2026/01)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

## 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57(2) ஆம் உபபிரிவுக்கு அமைவாக வெளியிடப்படும் அறிவித்தல்

பதிவுகள் இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் கூட்டுறவுச் சங்கங்களின் கலைத்து மூடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென பதிவினை இரத்துச் செய்த அனைத்து கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் இலங்கை பிரசைகள் அனைவருக்கும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57(2) ஆம் உபபிரிவுக்கு அமைவாக இத்தால் அறியத்தருகின்றேன். பதிவு இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் ஏதேனும் கூட்டுறவு சங்கமொன்றிலிருந்து தங்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைக் கோரிக்கைகள் இருப்பின், இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் இந்த உரிமைக் கோரிக்கைகளுக்காக விண்ணப்பிக்க வேண்டுமென இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் பதிவு இரத்துச் செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலம் கடந்ததன் பின்னர் முன்வைக்கப்படும் உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலனை செய்யப்படமாட்டாதென்பதையும் அறியத்தருகின்றேன்.

### குருநாகல் பிரிவு

| *தொடர் இல.* | *சங்கத்தின் பெயர்* | *பதிவு இலக்கம்* | *மூடப்பட்ட திகதி* |
|---|---|---|---|
| 01. | வரையறுக்கப்பட்ட அலவ்வ பிரதேச செயலாளர் பிரிவின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | வமே/கு/163 | 2024-07-20 |
| 02. | வரையறுக்கப்படாத பன்னவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | வமே/கு/297 | 2024-06-28 |
| 03 | வரையறுக்கப்பட்ட பலகஹயாய யசோதரா பெண்கள் சுவசக்தி கூட்டுறவு சங்கம் | வமே/கு/367 | 2024-08-31 |
| 04. | வரையறுக்கப்பட்ட கடிஹாரே ஐக்கிய கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் | வமே/கு/43 | 2025-03-07 |
| 05. | வரையறுக்கப்பட்ட துட்டுகெமுனு மத்திய மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவு சங்கம் | கு/1500 | 2024-11-25 |

### குளியாபிட்டிய பிரிவு

| *தொடர் இல.* | *சங்கத்தின் பெயர்* | *பதிவு இலக்கம்* | *மூடப்பட்ட திகதி* |
|---|---|---|---|
| 01. | வரையறுக்கப்பட்ட பக்மீருப்ப விக்கசித்த சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | வமா/குளி/139 | 2024-07-15 |
| 02. | வரையறுக்கப்பட்ட தும்மலசூரிய பால் உற்பத்தியாளர்களின் ஆரம்ப கூட்டுறவுச் சங்கம் | குளி/198 | 2024-12-31 |
| 03. | வரையறுக்கப்பட்ட பிபிலாதெனிய சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | வமா/குளி/09 | 202412-30 |
| 04. | வரையறுக்கப்படாத கொடவெல தெலஹெர சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | வமே/கு/ஹெ/56 | 2024-07-20 |
| 05. | வரையறுக்கப்பட்ட நிஜபிம சுவசக்தி மன்ற மாரகஸ்வெட்டிய நெலும் கூட்டுறவுச் சங்கம் | வமே/கு/ஹெ/54 | 2024-07-21 |
| 06. | வரையறுக்கப்பட்ட கடவெலகெதர நவோத்யா சத்கார்ய சுவசக்தி கூட்டுறவுச் சங்கம் | வமே/குளி/90 | 2024-12-31 |

| தொடர் இல. | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | மூடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 07. | வரையறுக்கப்பட்ட ஹொரகஸ்அகார பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | குளி/453 | 2024-12-31 |
| 08. | வரையறுக்கப்பட்ட ஹல்மில்லவெவ சித்தார்த்த மகா வித்தியாலய பாடசாலை கூட்டுறவுச் சங்கம் | குளி/191 | 2024-12-31 |
| 09. | வரையறுக்கப்பட்ட ஹெட்டிபொல நகர சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கம் | வமே/கு/ஹெ/59 | 2025-05-15 |

**சிலாபம் பிரிவு**

| தொடர் இல. | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | மூடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01. | வரையறுக்கப்பட்ட முக்குதொடுவாவ சேமுத்து கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/742 | 2024-08-31 |
| 02. | வரையறுக்கப்படாத தொடுவாவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | சிலா/510 | 2024-09-30 |
| 03. | வரையறுக்கப்பட்ட வென்னப்புவ தேர்தல் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/323 | 2024-12-31 |
| 04. | வரையறுக்கப்பட்ட வெல்ல புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/919 | 2024-05-13 |
| 05. | வரையறுக்கப்பட்ட குடாமடுவெல்ல குடாமடு சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | சிலா/948 | 2024-04-08 |
| 06. | வரையறுக்கப்பட்ட பொரலஸ்ஸ கொஸ்கஹ வத்த கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் | சிலா/908 | 2024-12-24 |
| 07. | வரையறுக்கப்படாத இஹல தும்மலகொட்டுவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | சிலா/848 | 2024-05-21 |
| 08. | வரையறுக்கப்பட்ட பூனபிட்டிய புனித செபஸ்தியர் சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | சிலா/853 | 2024-12-31 |
| 09. | வரையறுக்கப்படாத மேற்கு கட்டுகெந்த தர்மோதய சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | சிலா/507 | 2024-10-31 |
| 10. | வரையறுக்கப்பட்ட மண்டல குடாவ அல்மனார் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/887 | 2024-08-31 |
| 11. | வரையறுக்கப்பட்ட தெமட்டபிட்டிய இஷாரா பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/1032 | 2024-12-31 |
| 12. | வரையறுக்கப்பட்ட பொத்துவில்லுவ பிரகத்தி சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | சிலா/875 | 2024-11-10 |
| 13. | வரையறுக்கப்பட்ட எக்கமுத்து கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/1011 | 2024-04-18 |
| 14. | வரையறுக்கப்பட்ட சந்தனன்கம சூர்ய சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/996 | 2024-08-31 |
| 15. | வரையறுக்கப்பட்ட வன்னிமுந்தலம கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/696 | 2024-08-31 |
| 16. | வரையறுக்கப்பட்ட புஞ்சி குண்டுவ புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/1002 | 2024-08-22 |
| 17. | வரையறுக்கப்பட்ட பருதல்பொல நிர்மல சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/982 | 2024-10-15 |
| 18. | வரையறுக்கப்பட்ட மேற்கு கொலின்ஜாடிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/689 | 2024-11-15 |

| தொடர் இல. | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | மூடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 19. | வரையறுக்கப்பட்ட கொயிலாடிகம கிராம உத்தியோகத்தர் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/711 | 2024-11-30 |
| 20. | வரையறுக்கப்பட்ட இஹல மாவில சமாதி சத்கார்ய சுவசக்தி கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/947 | 2025-04-20 |
| 21. | வரையறுக்கப்பட்ட மேற்கு நயினமடம கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் | சிலா/725 | 2024-12-24 |
| 22. | வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட வளர்ப்பு மீன் மற்றும் நீரியல் வளர்ப்பாளர்களின் கூட்டுறவு சங்கம் | NWP/CH/AC/988 | 2025-04-10 |

**மாகோ பிரிவு**

| தொடர் இல. | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | மூடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | வரையறுக்கப்பட்ட பன்வெவ சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | வமா/கு/மாபி/03 | 2024-04-08 |
| 02 | வரையறுக்கப்பட்ட அம்போகம ஐக்கிய சுச்சரித மகளிர் சுவசக்தி கூட்டுறவு சங்கம் | வமா/கு/405 | 2024-11-06 |
| 03 | வரையறுக்கப்படாத வதுரெஸ்ஸ சமகி சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் | வமா/கு/மாபி/09 | 2025-06-20 |

வசந்த குணசேக்கர,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் / பதிவாளர் (வடமேல் மாகாணம்)

01 - 41

---

## மதிப்பீட்டு சதவீதத்திற்கான அமைச்சரின் ஒப்புதலைப் பெறுதல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 9(3) இன் கீழ் செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் அந்தச் சட்டத்தின் துணைப் பிரிவு 134 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் பயன்படுத்தும் ஹிங்குரக்கொடை பிரதேச சபையின் செயலாளர் ஆர். ஏ. ஹேமகாந்தி, ஹிங்குரக்கொடை பிரதேசத்தில் முன்னேற்றம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் அமைந்துள்ள சொத்துக்களின் மீது வருடாந்த மதிப்பில் ஏழு சதவீதம் (7%) வருடாந்த வரிப்பண வரியினை விதித்து அறவிடுவதற்காக எடுத்த தீர்மானத்தினை இதன் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆளுநர்,
உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சர்,
வடமத்திய மாகாணம்.

வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகம்,
2025, செத்தெம்பர் 10.

01-44

# பதவிகள் - வெற்றிடம்

## அறிவித்தல்

### தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தில் ஆரம்ப அரைத் திறன் சேவைப் பிரிவின் தரம் III (PL 2) மேற்பார்வையாளர், சமையல்காரர் ஆகிய பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படும் நிறுவன மற்றும் பராமரிப்பு நிலையத்திற்காக ஆரம்ப அரைத் திறன் சேவைப் பிரிவின் III ஆம் தரத்திற்குரிய மேற்பார்வையாளர் மற்றும் சமையல்காரர் பதவிகளின் வெற்றிடங்களுக்காக பின்வரும் தகைமைகளையும் அனுபவங்களையும் பூர்த்தி செய்துள்ளவர்களிடமிருந்து (பெண் / ஆண்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (நிறுவனத்தில் உள்ள வெற்றிடப் பதவிகள் பெண் / ஆண் எனும் போது ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஒழுங்கு பெண் / ஆண் ஆகிய உத்தியோகத்தர்களாகும்).

**01. பதவியின் தன்மை** : இப்பதவி நிரந்தரமானது.

**02. சம்பள அளவு** :

2025.03.25 ஆந் திகதிய இலக்கம் 10/2025 கொண்ட அரசாங்க நிருவாக சுற்று நிருபத்தின் அட்டவணை 1 இற்கு ஏற்ப இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவு ரூ. 41,800 -10 x 490 – 10 x 540 – 10 x 590 – 12 x 630 - ரூபா. 65,560.00 ஆகும். உங்களுக்கு அச்சுற்றுநிருபத்தின் எற்பாடுகளுக்கமைய அட்டவணை 11 இல் குறிப்பிடப்பட்டவாறு சம்பளம் வழங்கப்படும்.

(அவ்வப்போது அனுமதிக்கப்படும் சம்பளச் சுற்றறிக்கைக்கேற்ப சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் /அல்லது சம்பளத் திட்டம் மாறுபடக் கூடியதாகும்).

**03. தகைமைகளும் அனுபவமும் :-**

03.1 கல்வித் தகைமை :- கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் மொத்தம் (06) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

03.2 தொழில்சார் தகைமைகள் :-

| *பதவி* | *வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை* | *தொழில்சார் தகைமைகள்* |
|---|---|---|
| சமையல்காரர் | 02 | அரசு அல்லது அரசினால் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படும் சமையல் சமைத்தல் / சமையல்துறை பற்றிய ஆறு மாத காலத்திற்குக் குறையாத (06) NVQ 3 தொழிற் கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மேற்பார்வையாளர் | 01 | சிறுவர் பராமரிப்பு பற்றி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத பாடநெறியை மேற்கொண்டு NVQ 3 அல்லது அதற்குக் கூடிய மட்டத்தில் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். |

03.3 அனுபவம் :

| *பதவி* | *அனுபவம்* |
|---|---|
| சமையல்காரர் | அரசு, பகுதி அரசு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலப் பகுதியினுள் தொடர்ச்சியான சேவை அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| மேற்பார்வையாளர் | திணைக்ககளத்தில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் இல்லமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத காலப்பகுதியினுள் தொடர்ச்சியான சேவை அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். |

03.4 உடற் தகைமைகள் :-

I. விண்ணப்பதாரர் பதவியின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு போதிய மன நிலையுடன் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும்.

II. தென் மாகாணத்தினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவியின் கருமங்களை நிறைவேற்றுவதற்கும், சிறுவர்களுடன் பணிபுரிவதற்கும், உடல் ரீதியாகவும் மற்றும் மன ரீதியாகவும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

III. சிறுவர்களுடன் பணிபுரிவதற்கு உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமானவர் என வைத்திய அறிக்கையின் மூலம் ஆண்டுதோறும் உறுதிப்படுத்ததப்படல் வேண்டும்.

03.5 ஏனைய தகைமைகள் :

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் எற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று தென் மாகாணத்தினுள் தொடர்ச்சியாக மூன்று (03) வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (வதிவிடத்தை வாக்காளர் பட்டியலிலிருந்து உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் மூலம் நிரூபித்தல் வேண்டும்).

iv. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், விண்ணப்பங்கள் எற்றுக் கொள்ளப்படும் அறிவித்தலில் / வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு அனைத்து தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (விண்ணப்பதாரர்களால் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்ததுடன் முன்வைத்தல் வேண்டும்).

v. சட்டத்தின் முன் எந்தவொரு குற்றத்திற்கும் ஆளாகவில்லை என சட்டத்தை மதிக்கும் நபர் என வதிவிடத்திற்குரிய பொலிஸ் நிலையத்தின் அதிகாரியினால் முன்வைக்கும் பொலிஸ் சான்றிதழ் ஒன்றை ஆட்சேர்ப்புச் செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும்.

vi. விண்ணப்பதாரர் மீது குற்றவியல் அல்லது போதைப் பொருள் பாவனை பற்றிய குற்றங்கள் சுமத்தப்படவில்லை எனவும், நற்பண்பும் நல்ல சமூக நன்னடத்தையும் கொண்டவர் எனவும், கிராம அலுவலரின் அறிக்கை ஒன்றும் தாம் வசிக்கும் பிரதேசத்தின் சமாதான நீதவான் ஒருவரிடமிருந்தும் மதகுரு ஒருவரிடமிருந்தும் பெற்றுக் கொண்ட நன்னடத்தை சான்றிதழ்கள் 02 ஐ விண்ணப்பதாரரால் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன்வைத்தல் வேண்டும். அந்நன்னடத்தை சான்றிதழ் பராமரிப்பு இல்லத்திலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

vii. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் சிறுவர்களுடன் பணிபுரிய ஏற்றவர் எனவும், உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் ஆரோக்கயமான நிலையிலுள்ளவர் எனவும், அரச வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் மூலம் பெற்றுக் கொண்ட சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரர் மூலம் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு முன் வைத்தல் வேண்டும்.

**04. வயதெல்லை :**

i. குறைந்த வயதெல்லை : 18 வருடங்கள்

ii. கூடிய வயதெல்லை : 45 வருடங்கள்

**05. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

நியமன அதிகாரி மூலம் தகைமைகளைக் கொண்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் அப்பதவிகளுக்குரிய நடைமுறைப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்களைக் கொண்டு வெற்றிடங்களின் எண்ணிக்கை 100% பூர்த்தி செய்யப்படும்.

**06. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை / நடைமுறைப் பரீட்சை பற்றிய விபரங்கள் :**

| *பதவி* | *பரீட்சை* | *நேரம்* | *வழங்கப்படும் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| மேற்பார்வையாளர் | 1. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை | 30 நிமிடங்கள் | 100 |
| சமையல்காரர் | 1. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை | 30 நிமிடங்கள் | 100 |
| | 2. நடைமுறைப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 |

**07. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்பு* | *விடயப்பரப்பு* | *கூடிய புள்ளிகள்* |
|---|---|---|
| 01. அனுபவம் | தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ சிறுவர் இல்லம் அல்லது முதியோர் இல்லத்தில் 05 ஆண்டுகளுக்கு மேலாக சேவை செய்துள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 03 புள்ளிகள் வீதம் | 30 |
| 02. கல்வித் தகைமைகள் | க.பொ.த. (உ./த.) சித்தி பெற்றிருத்தல் | 04 |
| | க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு அதி விசேட திறமைச் சித்திக்கும் 05 புள்ளிகள் வீதம் | 15 |
| | க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு அதி சிறப்புச் சித்திக்கும் 04 புள்ளிகள் வீதம் | |
| | க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு திறமைச் சித்திக்கும் 03 புள்ளிகள் வீதம் | |
| | க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு சாதாரண சித்திக்கும் 02 புள்ளிகள் வீதம் | |
| | க.பொ.த. (சா./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு அதி விசேட திறமைச் சித்திக்கும் 03 புள்ளிகள் வீதம் | 18 |
| | ஆட்சேர்ப்புச் செய்யும் போது குறைந்த தகைமைகளாகக் கருதப்படும் இரண்டு பாடங்களில் பெற்றுக் கொண்ட திறமைச் சித்திக்கும் மேலதிகமாக க.பொ.த. (சா./த.) பரீட்சையில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு அதிசிறப்பு / திறமைச் சித்தி ஒன்றுக்காக 02 புள்ளிகள் வீதம் | |
| 03. விடய அறிவு | உரிய துறை பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கட்டமைப்புக் கேள்விகள் | 25 |
| 04. ஆளுமை மற்றும் மனப்பாங்கு | நேர்முகப் பரீட்சையின் போது பிரதிபலிக்கும் ஆளுமை மற்றும் மனப்பாங்கு | |

08. இணைப்பு 01 இன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் 2026.02.02 ஆந் திகதிக்கு முன்னர் **"தென் மாகாண விளையாட்டு, சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை அமைச்சு, 3 ஆவது மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி"** எனும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.

09. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது தவறானது என்று ஆட்சேர்ப்புக்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டால் உங்களின் அபேட்சகர் நிலை நிராகரிக்கப்படும். அவ்வாறான உண்மையற்ற அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்டால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவதும் நிரப்பப்படாததுமான உரிமை தென் மாகாண விளையாட்டு அமைச்சுக்குரியதாகும்.

கே.யூ. சந்திரலால்,
செயலாளர்,
தென் மாகாண இளைஞர் விவகார, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை அமைச்சு.

தென் மாகாண இளைஞர் விவகார, சமூக நலன்புரி,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை அமைச்சு.
03 ஆவது மாடி, தக்ஷினபாய,
லபுதுவ,
காலி.

**தென் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்களத்தில் ஆரம்ப அரைத் திறன் சேவைப் பிரிவின் தரம் III (PL 2) மேற்பார்வையாளர், சமையல்காரர் ஆகிய பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் - 2025**

அலுவலக உபயோகத்திற்கு [ ]

விண்ணப்பிக்கும் பதவி [ ]

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :
   ..........................................................................................................................
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

   1.2 முழுப் பெயர் :
   ..........................................................................................................................
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

   1.3 முழுப் பெயர் :
   ..........................................................................................................................
   (சிங்களத்தில் / தமிழில்)

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

3. நிரந்தர முகவரி : (சிங்களத்தில் / தமிழில்)
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

4. பால் (ஆண் / பெண்) : ஆண் ☐ பெண் ☐

(உரிய சதுரத்தில் √ குறியீட்டை இடவும்)

5. பிறந்த திகதி :
வருடம் : ………………………………… மாதம் :- ……………………….. திகதி :- ……………………….

6. தொலைபேசி இலக்கம் : ………………………………………………………………………………………………..

7. விவாகமானவர் / விகாகமாகாதவர் பற்றியது :

விவாகமானவர் ☐ விகாகமாகாதவர் ☐

(உரிய சதுரத்தில் √ குறியீட்டை இடவும்)

8. இலங்கைப் பிரசையா என்பது பற்றி : ஆம் ☐ இல்லை ☐
(உரிய சதுரத்தில் √ குறியீட்டை இடவும்)

9. உரிய நிருவாக மாவட்டம் : ……………………………………………………………………………………………

10. பிரதேச செயலகம் : ……………………………………………………………………………………………

11. கிராம அலுவலர் பிரிவு : ……………………………………………………………………………………………

12. கல்வித் தகைமைகள் :-

12.1 க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

முதலாம் தடவை - வருடமும் மாதமும் : …………… பரீட்சை சுட்டெண் ………....
இரண்டாம் தடவை - வருடமும் மாதமும் : …………… பரீட்சை சுட்டெண் ………....

| பாடம் | முதலாம் தடவை | இரண்டாம் தடவை | பாடம் | முதலாம் தடவை | இரண்டாம் தடவை |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

13. ஏனைய கல்வித் தகைமைகள் :

…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………..

14. தொழில்சார் தகைமைகள் :

| *நிறுவனம்* | *மேற்கொண்ட பாடநெறி* | *கால எல்லை* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

15. அனுபவம் :

| *நிறுவனம்* | *மேற்கொண்ட பாடநெறி* | *கால எல்லை* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

16. நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா?
(உரிய சதுரத்தில் √ குறியீட்டை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

ஆம், எனின் விபரிக்கவும்.

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………………………

17. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். இங்கு சில பகுதிகள் பூரணப்படுத்தப்படாமல் மற்றும் / அல்லது பிழையாக பூர்த்தி செய்யப்படுவதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக் கொள்கின்றேன். மேலும், இங்கு அனைத்து பகுதிகளையும் பூரணப்படுத்தியுள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்தல் உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படுமாயின், நியமிக்கப்பட முன்னர் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமிக்கப்பட்ட பின்னர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் அனைத்து விபரங்களையும் மிகவும் நன்றாக வாசித்து விளங்கிக் கொண்டேன் எனவும், அதிலுள்ள அனைத்து கருத்துக்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவல்களையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

………………………….. ………………………………
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

18. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்கும் …………………………………... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் …….……… ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 17 ஆம் பந்தியின் கீழ் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………….
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : ……………………………………………………………………………………………
உறுதிப்படுத்துபவரின் பெயர் : ……………………………………………………………………………………………
பதவி : ……………………………………………………………………………………………
விலாசம் : ……………………………………………………………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

19. திணைக்களத் தலைவரின் அத்தாட்சி (அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்காக மாத்திரம்)

19.1 உத்தியோகத்தரின் தனிநபர் கோவையின் பிரகாரம், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள் வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானது / திருப்திகரமற்றது.

சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளார் / பெறவில்லை.

ஏதேனும் ஒரு வகையில் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படவில்லை / உட்பட்டுள்ளார்.

19.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்படின், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து இவ்வுத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது. விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்தவில்லை.

………………………….. ………………………………………
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய மாகாணத்தில் வசிக்கும் தகைமையுடைய ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் MN 03-2025 சம்பளத் தொகுதிற்கமைய இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா. 52,250 – 10X800 – 11X1190 – 10X1320 – 10X1350 – ரூபா 100,040.00 ஆகும். அத்துடன் இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய நியமனம் செல்லுப்படியாகும் திகதியிலிருந்து சம்பளம் செலுத்தப்படும்.

**03. சேவை நிபந்தனைகள் :**

3.1 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமை பெறும் அபேட்சகர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு, இச்சேவைக்கு நியமிக்கப்படுவர்.

3.3 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்திற்கமைய உரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை மற்றும் அரசகரும மொழிக்கான தேர்வுப் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

3.4 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் மத்திய மாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளும் எத்தகைய கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்துடன், நியமிக்கப்படும் சேவை நிலையத்தில் கடமைப் பொறுப்பேற்கும் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 03 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும்.

3.5 இப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை, மத்திய மாகாண நிதி ஒழுங்கு விதிகள், மத்திய மாகாண தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு, நடைமுறை விதி, மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் வெளியிடப்படும் விதிமுறைகள் அல்லது கட்டளைகள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிற விதிமுறைகள் அல்லது கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டு ஒழுகுதல் வேண்டும்.

**04. நிலவும் வெற்றிடங்கள் :**

4.1 மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இல் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள இருப்பதுடன், இப்பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.01.23 ஆகும். விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2026.01.23 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## 05. தகைமைகள்

5.1 கல்வித் தகைமைகள் :

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், தொழில்நுட்பப் பிரிவின் கீழ் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (பாட இலக்கம் 66), தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (பாட இலக்கம் 67), விவசாய விஞ்ஞானம் (பாட இலக்கம் 08) ஆகிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்து).

அல்லது

கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவின் கீழ் பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (பொது வினாத்தாள்/ ஆங்கிலம் தவிர்ந்து)

5.2 தொழில்சார் தகைமைகள் :

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் வகையில் குறைந்தது இரு வருட கால்நடை வளர்ப்பு அல்லது விவசாய துறையில் தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகுதிச் சான்றிதழினைப் பெற்றிருத்தல். அதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள பாடநெறிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. கரந்தகொல்லை இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலையினால் வழங்கப்படும் இருவருட டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

II. அநுராதபுர/ சிப்பிக்குளம் கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையத்தினால் வழங்கப்படும் கால்நடை வளர்ப்பு தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் ;

அல்லது

III. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் இயங்கும் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மற்றும் நைவல உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படும் விவசாயம் தொடர்பான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) ;

அல்லது

IV. விவசாய திணைக்களத்தின் கீழ் உள்ள குண்டசாலை இலங்கை விவசாயக் கல்லூரி மற்றும் அதற்குச் சமமான வேறு கல்லூரிகளினால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

V. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கும் வகையில் தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகுதியுடன் கூடிய விவசாய டிப்ளோமா சான்றிதழ்.

5.3 அனுபவம் : ஏற்புடையதன்று

5.4 பௌதீக தகைமைகள்:

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவான வகையில் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.5 ஏனைய தகைமைகள் : -

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2026.01.23) உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். (இன்றேல், விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின் அது பற்றிக் கவனத்திற் கொள்ளப்படும்).
IV. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவார்.
V. விண்ணப்பதாரர் 2026.01.23 ஆம் திகதியன்று பதவியுடன் தொடர்புடைய அனைத்து தகைமைகள் மற்றும் வயதெல்லையினை எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் மாத்திரம், சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமைகளைப் பெற்றுக்கொண்டார் என ஏற்றுக்கொள்ளப்படும்.

**06. வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று (2026.01.23) 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**07. பரீட்சைத் திட்டம்**

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
II. பரீட்சார்த்திகள் பரீட்சையில் தோற்றும் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.
III. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.
IV. பரீட்சை நிலையம் – கண்டி நகரில் மாத்திரம் நடைபெறும்.

**08. ஆட்சேர்ப்பிக்கும் முறை**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.. எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய எத்தனித்துள்ள எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்று தகைமை பெற்று இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வது தொடர்பில் தீர்மானம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும். இதன்போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

09. **பரீட்சை தொடர்பான பாடவிதானம்**

| *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் சார் தொழில்நுட்பவியல் வினாத்தாள் | 02 மணித்தியாலம் | 100 | 40% |

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். |
| விடயம் சார் தொழில்நுட்பவியல் வினாத்தாள் | பதவிசார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட சுருக்க மற்றும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும். |
| | தொழில்நுட்பவியல் வினாத்தாளின் பாடத்திட்டம் |
| | |
| | 1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கால்நடைத் துறையின் பங்களிப்பு |
| | 2. இலங்கையின் காலநிலை வலயங்கள் |
| | 3. மாடு வளர்ப்பு |
| | 4. கோழி வளர்ப்பு |
| | 5. ஆடு வளர்ப்பு |
| | 6. பன்றி வளர்ப்பு |
| | 7. முயல் வளர்ப்பு |
| | 8. இலங்கையில் கால்நடை வளர்ப்புத் தொடர்பான தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் |
| | 9. செயற்கைமுறை சினைப்படுத்தல் |
| | 10. பண்ணை முகாமைத்துவம் |
| | 11. விவசாய விரிவாக்கல் |
| | 12. பாற்பொருள் உற்பத்தியும் உணவு தொழில்நுட்பமும் |
| | 13. பண்ணை இயந்திரமயமாக்கல் |
| | 14. விலங்குப் போசணை |
| | 15. விலங்குகளின் தொற்றுத்தடைக்காப்பு (Animal Quarantine) |
| | 16. மண் விஞ்ஞானம் மற்றும் கூட்டெரு தயாரித்தல் |
| | 17. நிகழ்கால கால்நடை அபிவிருத்திக் கொள்கைகள், கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள், கால்நடை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அதன் கடமைகளும் பொறுப்புக்களும் |
| | 18. கால்நடைத் துறை தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் சவால்கள், கால்நடைத் துறையின் அபிவிருத்தி தேசிய அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் விதம் |

**10. விண்ணப்பிக்கும் முறை :**

I. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ-4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 04 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 05 முதல் 07 வரையிலான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 08 முதல் 12 வரையிலான பந்திகள் மூன்றாம் பக்கத்திலும், ஏனையவை நான்காம் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்தியினால் முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது.

II. விண்ணப்பப்படிவத்தைத்தயார்செய்து கொள்ளும்போது பரீட்சையின்பெயரினைசிங்களவிண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

III. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

IV. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

V. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் **"செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி"** என்ற முகவரிக்கு **2026.01.23** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் –2025"** எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக அமைவதுடன், விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VI. தபாலில் தொலைந்த மற்றும் தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான புகார்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

VII. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது.

VIII. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

IX. பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது, அறிவித்தலுக்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்படும் சந்தர்ப்பத்தில், அவரது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்யப்படும்.

X. பரீட்சை நிலையம் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

XI. அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு காரியாலயத்திற்கு அறிவித்தல் வேண்டும்.
(தொலைபேசி இல. 081 – 2213097)

11. இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பங்களை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. பரீட்சார்த்திகள்தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சைமண்டபத்தில்மாத்திரம்பரீட்சைக்காகத்தோற்றுதல்வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சையினை நடாத்தல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். அவ்விதிகளை மீறும் பட்சத்தில், மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

13. ஆள் அடையாளம்: இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமப்பித்தல் வேண்டும்:

- ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

- அத்துடன், பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறு முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். மேலும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளால் விண்ணப்பதாரியை அடையாளங் காணக் கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

**14. பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

14.1 இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

14.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கனவனத்திற் கொள்ளப்படமாட்டாது, அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

15. விண்ணப்பதாரர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்.

16. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள/ குறிப்பிடாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

17. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2025 திசெம்பர் 26.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவைப் பிரிவின் கால்நடை வள அபிவிருத்தி ஆலோசகர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025**

பரீட்சை இலக்கம் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் [ ] (சிங்களம் - S , தமிழ் - T, ஆங்கிலம் - E)
(உரிய குறியீட்டினை கூட்டினுள் எழுதுக)
(மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………………………………………
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் : உதா SILVA, A.B.C.D)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………………………………………
திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ……………………………………..
…………………………………………………………………………………………………………………………...

1.4 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) : ………………………………………………..
……………………………………………………………………………………………………………………......

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ……………………………………………………………………..
……………………………………………………………………………………………………………………………

2.2 மின்னஞ்சல் முகவரி : ……………………………………………………………………………………………………

2.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

2.4 பால் (ஆண் - 0, பெண் - 1) : [ ]

2.5 சமூகநிலை : திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2 [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

3. 3.1 பிறந்த திகதி : [Y | Y | Y | Y | M | M | D | D]

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு (2026.01.23) வயது :

வருடங்கள் : ……………………… மாதங்கள் : …………………………………… நாட்கள் : ……………………

3.3 தொலைபேசி இலக்கம் (பரீட்சை தொடர்பில் அறிவிப்பதற்காக) :

கையடக்க : [ | | | | | | | | | ] நிரந்தர : [ | | | | | | | | | ]

4. விண்ணப்பதாரரின் நிரந்நதர வதிவிட மாவட்டம் ……………………………………………………………………………………

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

5. வாழ்க்கைத் துணையின் நிரந்தர வதிவிட மாவட்டம் (விண்ணப்பதாரர் இம்மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் கூடிய நிரந்தர வதிவினைக் கொண்ட வாழ்க்கைத் துணையினைக் கொண்டிருப்பின்)
…………………………………………………………………………………………………………………………………………..

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

6. கல்வித் தகைமைகள் :

6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு : ……………………………………
சுட்டிலக்கம் : …………………………………………

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :
பரீட்சை ஆண்டு: ……………………………………
சுட்டிலக்கம்: …………………………………………

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. தொழில்சார் (தொழில்நுட்ப) தகைமைகள் : (தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் சான்றுபடுத்திய பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பூர்த்தி செய்துள்ள கற்கை நெறிகள்* | *கற்கைநெறி கால எல்லை* | *NVQ மட்டம்* | *NVQ சான்றிதழ் இலக்கம்* | *சான்றிதழ் இலக்கமும் செல்லுபடியாகும் திகதியும்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

8. ஏனைய தகைமைகள்: ……………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………..

9. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 செலுத்துதல் தொடர்பான விபரம் :
   i. பணம் செலுத்திய பிரதேச செயலகம் : ……………………………………………………………………………
   ii. திகதி : ……………………………………………………………………………
   iii. பற்றுச்சீட்டின் இலக்கம் : ……………………………………………………………………………

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்)

10. நீங்கள் யாதேனும் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீரா? …………………………………………
‘ஆம்’ எனின் விபரங்களைக் குறிப்பிடவும் ……………………………………………………………………………………..

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

………………………………………………

திகதி : ……………………………… பரீட்சார்த்தியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ………………………………………………………………… என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் ………………………………………… ஆந் திகதி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : …………………………………

……………………………………………
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்
(உத்தியோக முத்திரை.)

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ………………………………………………………………
பதவி : ………………………………………………………………
முகவரி : ………………………………………………………………

01-54

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2026

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | - | வெள்ளி | 02.01.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2025 |
| | | வெள்ளி | 09.01.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2025 |
| | | வெள்ளி | 16.01.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2026 |
| | | வெள்ளி | 23.01.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2026 |
| | | வெள்ளி | 30.01.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2026 |
| **பெப்புருவரி** | - | வெள்ளி | 06.02.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2026 |
| | | வெள்ளி | 13.02.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2026 |
| | | வெள்ளி | 20.02.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2026 |
| | | வெள்ளி | 27.02.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2026 |
| **மாச்சு** | - | வெள்ளி | 06.03.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 20.02.2026 |
| | | வெள்ளி | 13.03.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 27.02.2026 |
| | | வெள்ளி | 20.03.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 06.03.2026 |
| | | வெள்ளி | 27.03.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 13.03.2026 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.